# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2245/32 - 2021 සැප්තැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2021.09.17

2245/32 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: E4/ தெதுரு ஓயா/ கையகப்படுத்தல்/ பிரிவு 5.

காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2010/IR/83.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், நிக்கவரட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், மாங்குல் ஓதொட்ட கோரளையின் சிறு பிரிவில், கிரிந்திகல்ல, போகொல்லாகம, ரந்தெனிகம எனும் கிராமங்களில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் அளக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட 2014.10.22, 2014.09.30 மற்றும் 2014.10.31 ஆகிய திகதிகளில் இ.கி.வ. 2941 இன் பத்திர இலக்கம் 7, மேலதிக இலக்கம் 7 - இ.கி.வ. 1986 இன் பத்திர இலக்கம் 2 மேலதிக இலக்கம் 2, இ.கி.வ. 2959 இன் பத்திர இலக்கம் 01 மேலதிக இலக்கம் 3, இ.கி.வ. 2938 இன் பத்திர இலக்கம் 01 மேலதிக இலக்கம் 01 தேசப் படத்தில் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணம் 0.2747 ஹெக்டயார் இற்கான கீழே விபரிக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் மற்றும் விஸ்தீரணத்திலான காணித்துண்டுகள்.

**இ.கி.வ. 2941**

**1. துண்டு இல. 897**

காணியின் பெயர்: மீகஹமுல ஹேன; காணியின் விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு, எம். ஏ. வி. எம். ஆலோக்க பண்டார என்பவரால் அனுமதியின்றி பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது; விஸ்தீரணம்: 0.0173 ஹெக்டயார்.

2. துண்டு இல. 875

காணியின் பெயர்: கிரிந்திகல்லே மஹவெவ; காணியின் விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.1941 ஹெக்டயார்.

இ.கி.வ. 1986

1. துண்டு இல. 346

காணியின் பெயர்: பாரகாவ ஹேன; காணியின் விபரம்: வயல்; உரிமை கோருபவர்: அரசு, சீ. ஜே. எம். எம். எஸ். சந்திரசேகர என்பவரால் அனுமதியின்றி பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது; விஸ்தீரணம்: 0.0132 ஹெக்டயார்.

இ.கி.வ. 2959

1. துண்டு இல. 167

காணியின் பெயர்: ஹபஹேன, கோன்கஹமுல ஹேன மற்றும் சியம்பலாகஹமுல ஹேன; காணியின் விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: டி. எம். சுமனாவதீ; விஸ்தீரணம்: 0.0484 ஹெக்டயார்.

இ.கி.வ. 2938

1. துண்டு இல. 95

காணியின் பெயர்: - ; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு, ஏ. வி. அபயசிங்ஹ முதியான்சே என்பவரால் அனுமதியின்றி பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது; விஸ்தீரணம்: 0.0017 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு நிக்கவரட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜே. எம். ஐ. ஆர். கே. ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்,
நிக்கவரட்டிய.

பிரதேச செயலகம்,
நிக்கவரட்டிய,
2021, செத்தெம்பர் 17.

10 - 21

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.